ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ   அதிவிசேஷமானது

අංක 1808/12 - 2013 අප්‍රේල් 30 වැනි අඟහරුවාදා - 2013.04.30
*1808/12 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

2013 ஆம் ஆண்டின் 85 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல. : எல்டீ/05/2005/ஈ/378.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : எம்ரீ/டிஎஸ்/எல்எச்ஓ/ஏசீ/2005/01.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.03.15.

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்: பிரதேச செயலாளர், மூதூர்.

2. காணியின் விபரம் : கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டத்தில், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில், கொட்டியார்பற்று சிறு பிரிவில், மூதூர் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2008.11.07 ஆந் திகதிய திரு/422 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட சுமார் 0.3032 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

**01. துண்டு இல. 1 - அக்கரைச்சேனைக்காடு - விஸ்தீரணம் : சுமார் 0.3032 ஹெக்டயார்**

வடக்கு : ஆரம்ப வரைபட இல. 6014 இல் துண்டு இல. 2 (ரீபீ 377618) மற்றும் ஆரம்ப வரைபட இல. 6051 இல் துண்டு இல. 2 (ரீபீ 377572) ;
கிழக்கு : ஆரம்ப வரைபட இல. 6014 இல் துண்டு இல. 4 (ரீபீ 377619) ;
தெற்கு : ஆரம்ப வரைபட இல. 6014 இல் துண்டு இல. 5 (ரீபீ 381025) மற்றும் ஆரம்ப வரைபட இல. 4253 இல் துண்டு இல. 584 (ரீபீ 351834) மற்றும் ஆரம்ப வரைபட இல. 6014 இல் துண்டு இல. 2 (ரீபீ 377618) ;
மேற்கு : அப்துல் காசிம் வீதி (ஆரம்ப வரைபட இல. 6014 இல் துண்டு இல. 3).

05 -388

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.